தினதந்தி 27.08.2023



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மையத்தில் நடந்த சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான எழுத்து தேர்வை விழுப்புரம் சரக போலீஸ் டி.ஐ.ஜி. ஜியாவுல்ஹக், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சசாங் சாய் ஆகியோர் பார்வையிட்டபோது எடுத்த படம்.

# போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான எழுத்து தேர்வு

## 5 மையங்களில் நடந்தது

விழுப்புரம், ஆக.27-

விழுப்புரம் மாவட்டத்தில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான எழுத்து தேர்வு 5 மையங்களில் நடந்தது.

### சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான தேர்வு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில் 749 போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் (621 ஆண்கள், 128 பெண்கள்) காலிப்பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு நேற்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம் சரஸ்வதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வி.ஆர்.பி. மேல்நிலைப்பள்ளி, ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, அரசூர் வி.ஆர்.எஸ். பொறியியல் கல்லூரி ஆகிய 5 தேர்வு மையங்களில் நடந்தது.

### ஆர்வமுடன் எழுதினர்

நேற்று காலை பொது அறிவுத்தேர்வு நடைபெற்றது. இதற்காக தேர்வு எழுத வருபவர்கள் அனைவரும் காலை 8.30 மணிக்குள் தேர்வுமையத்திற்குள் இருக்க வேண்டும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததால் குறிப்பிட்ட நேரத்திற்குள் வந்தவர்கள் மட்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். காலை 8.30 மணிக்கு பிறகு வந்தவர்கள் தேர்வுமையத்திற்குள் அனுமதிக்கபடவில்லை. அதுபோல் தேர்வர்களின் தேர்வுக்கூட சீட்டை சரிபார்த்து தேர்வுமையத்திற்குள் உள்ளே அனுப்பி வைத்தனர். செல்போன், ப்ளூடூத் போன்ற எந்தவொரு எலக்ட்ரானிக் சாதனங்களையும் எடுத்துச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

இத்தேர்வானது காலை 10 மணிக்கு தொடங்கி பகல் 12.30 மணி வரை நடைபெற்றது. இத்தேர்வை எழுதுவதற்காக 4,834 ஆண்களும், 1,368 பெண்களும் என மொத்தம் 6,202 பேர் விண்ணப்பித்தனர். இதில் 4,501 ஆண்களும், 805 பெண்களும் ஆக மொத்தம் 5,306 பேர் ஆர்வமுடன் வந்திருந்து தேர்வை எழுதினர். விண்ணப்பித்தவர்களில் 681 ஆண்களும், 215 பெண்களும் என 896 பேர் தேர்வு எழுத வரவில்லை.

### மாலையில்...

இத்தேர்வு முடிந்ததும் மாலை 3.30 மணிக்கு தமிழ் தேர்வு நடந்தது. இத்தேர்வை எழுத 5,323 ஆண்களும், 1,467 பெண்களும் என மொத்தம் 6,790 பேர் விண்ணப்பித்தனர். இவர்களில் 4,510 ஆண்களும், 1,234 பெண்களும் ஆக மொத்தம் 5,744 பேர் ஆர்வமுடன் வந்திருந்து தேர்வை எழுதினர். விண்ணப்பித்தவர்களில் 813 ஆண்களும், 233 பெண்களும் என 1,046 பேர் தேர்வு எழுத வரவில்லை.

இத்தேர்வானது மாலை 5.10 மணிக்கு முடிவடைந்தது. தேர்வு பாதுகாப்பு பணி மற்றும் தேர்வு மைய கண்காணிப்பு பணிகளில் 1,031 போலீசார் ஈடுபட்டனர்.

### அதிகாரிகள் பார்வையிட்டனர்

இதனிடையே விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மையத்தில் நடந்த தேர்வை விழுப்புரம் சரக போலீஸ் டி.ஐ.ஜி. ஜியாவுல்ஹக், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சசாங் சாய் ஆகியோர் பார்வையிட்டனர். தொடர்ந்து, இன்று (ஞாயிற்றுக்கிழமை) காவல்துறையில் 5 ஆண்டுகள் பணி முடித்த 45 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு 20 சதவீத இடஒதுக்கீட்டின் அடிப்படையில் சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான தேர்வு காலை 10 மணி முதல் பகல் 12.30 மணி வரை விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி தேர்வு மையத்தில் நடக்கிறது. இத்தேர்வை 756 ஆண்களும், 158 பெண்களும் என மொத்தம் 914 போலீசார் எழுத உள்ளனர்.



தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# 17-வது ஆட்சி மன்றக்குழு கூட்டம்

விழுப்புரம், ஆக.29-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 17-வது ஆட்சி மன்றக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் கல்லூரி முதல்வர் அகிலா வரவேற்றார். வல்லுனர்கள் எழிலன் (வேலூர் கல்லூரி கல்வித்துறை இணை இயக்குனர்) அண்ணாமலை நுண்ணுயிரியல் இணைப்பேராசிரியர் கணேஷ், சென்னை செயின்ட் தாமஸ் கலை அறிவியல் கல்லூரி முன்னாள் முதல்வர் செல்வராஜ், இ.எஸ்.எஸ்.கே. கல்வி அறக்கட்டளை செயலாளர் செந்தில்குமார், ஆசிரியர் பிரதிநிதிகள் கணினி அறிவியல் துறைத்தலைவர் மனோஹரி, வேதியியல் துறைத்தலைவர் சத்தியசாவித்திரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் 2022 டிசம்பர் முதல் 2023 ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்திற்கான கல்லூரியின் செயல்திறன் அறிக்கைசமர்பிக்கப்பட்டது. மேலும் தெய்வானை அம்மாள் கல்லூரியின் சமூகப் பங்களிப்பு, சர்வதேச, தேசிய ஒத்துழைப்பு, நிதியுதவி பெற்ற பட்டறை, கருத்தரங்கம், கல்லூரி செயல்பாடுகள், மாணவர், ஆசிரியர் பங்கேற்பு, கல்வி மற்றும் மாணவர் முன்னேற்றம், மாணவர் தேர்ச்சி சதவீதம் ஆகியவற்றை குறிப்பிட்டு காட்டி ஆட்சி மன்றக்குழு வல்லுனர்களின் பங்களிப்பை செயலாளர் செந்தில்குமார் பாராட்டினார். தொடர்ந்து, இ.எஸ். பாலிடெக்னிக் கல்லூரியின் முன்னாள் மாணவர் இஸ்ரோவின் இயக்குனர் விஞ்ஞானி வீரமுத்துவேல் பற்றி பெருமையுடன் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து, சிறப்பான கல்வி முன் முயற்சி, தொழில் நிறுவன ஒத்துழைப்பு, ஆராய்ச்சி மானியம், மாணவர் முன்னேற்றம் மற்றும் இ.எஸ். நர்சிங் கல்லூரியின் ஆசிரிய பரிமாற்றத் திட்டம் ஆகியவை பற்றி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள் விவாதித்து ஒப்புதல் வழங்கினர்.

தினதந்தி 05.09.2023

# மாணவிகளுக்கு பரிசு



தேசிய விளையாட்டு தின விழாவை முன்னிட்டு விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டபோது எடுத்த படம். இதில் கல்லூரியின் தேசிய மாணவர் படை இணை அலுவலர் விஜயசாமுண்டீஸ்வரி, முனைவர் அகிலா, உடற்கல்வி ஆசிரியர் விஜயலட்சுமி மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# தனியார் மகளிர் கல்லூரியில் பெண் தொழில்முனைவோர் கருத்தரங்கம்



விநாடி-வினாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசு, சான்றிதழ் வழங்கிய புதுச்சேரி பல்கலைக்கழக வணிகவியல் துறை இணைப் பேராசிரியை வி.கவிதா.

**விழுப்புரம், ஆக. 29:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவு மற்றும் வணிகவியல் துறை சார்பில் பெண்கள் தொழில்முனைவோர் மற்றும் அதிகாரமளித்தல் குறித்த கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

இதில், புதுச்சேரி பல்கலைக்கழக வணிகவியல்துறை இணைப் பேராசிரியை வி.கவிதா பங்கேற்றுப் பேசியது: வணிகவியல் துறையில் பெண்களுக்கு முக்கிய பங்கு வகிப்பதற்கான சாத்தியக் கூறுகள் அபரிமிதமாக உள்ளன. பெண் தொழில்முனைவோருக்கு ஆதரவான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதும் முக்கியமானதாக உள்ளது. பெண்களால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கமுடியும். பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம், சமத்துவமான மற்றும் வளமான சமுதாயத்தை நாம் அடைய முடியும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாணவிகளிடையே விநாடி-வினாப் போட்டிகள் நடத்துப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரி வணிகவியல் துறை உதவிப் பேராசிரியை எஸ்.ராஜலட்சுமி வரவேற்றார். பேராசிரியர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர்.

தினமணி
29.08.2023

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

விழுப்புரம், செப். 10–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 22வது பட்டமளிப்பு விழா நடந்தது.

இ.எஸ்., கல்விக்குழும நிர்வாக தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கி, விழாவைத் துவக்கி வைத்தார். முதல்வர் அகிலா வரவேற்றார். வேலூர், திருவள்ளுவர் பல்கலைக் கழக துணைவேந்தர் ஆறுமுகம், இளங்கலை பட்டப்படிப்பு நிறைவு செய்த 723 மாணவிகளுக்கு பட்டங்களும், துறை சார்ந்த மற்றும் பல பாடங்களில் முதன்மை பெற்ற மாணவிகளுக்கு கல்லூரி அறக்கட்டளை சார்பில் விருது, ஊக்கத்தொகை வழங்கினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், 'பெண்களுக்கு கல்வி அறிவு, திறன் மற்றும் தன்னம்பிக்கை அளிப்பதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. பெண் கல்விக்கான சவால்கள், பெண்கள் சமூகத்தில் வளர்ச்சி பெறும் வழிமுறைகள், எதிர்கால திட்டங்கள் ஆகியவை குறித்து திருவள்ளுவர், பாரதி படைப்புகள் உள்ளது' என்றார்.

விழாவில், துணை முதல்வர், தேர்வு கட்டுப்பாட்டாளர், புல முதன்மையர்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள், பெற்றோர்கள் பங்கேற்றனர்.


ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு பேராசிரியை கலைமதி நன்றி கூறினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில், இளங்கலை மாணவிகளுக்கு வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆறுமுகம் பட்டம் வழங்கினார். அருகில், இ.எஸ்., கல்விக்குழும நிர்வாக தலைவர் செந்தில்குமார்.

தினமலர் - 10.09.2023

# பட்டமளிப்பு விழா...




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 23– ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்லூரியில் இளங்கலை பயின்ற 647 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிய சென்னை சோஹோ கற்றல் புலத்தின் தலைவர் ராஜேந்திரன் தண்டபாணி. உடன், விழுப்புரம் இ.எஸ்.கல்விக் குழுமங்களின் நிர்வாகத் தலைவர் எஸ்.செந்தில்குமார், கல்லூரி முதல்வர் எஸ்.அகிலா, பேராசிரியர்கள்.

Dinamani - 12.09.2023

தினதந்தி-10.09.2023




விழாவில் ஒரு மாணவிக்கு வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆறுமுகம் பட்டம் வழங்கியபோது எடுத்த படம். அருகில் இ.எஸ். கல்விக்குழும நிர்வாக தலைவர் செந்தில்குமார் உள்ளார்.

**தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா:**

# பெண்களுக்கு கல்வி தன்னம்பிக்கையுடன் அதிகாரத்தையும் அளிக்கிறது

## திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆறுமுகம் பேச்சு

விழுப்புரம், செப்.10- கல்வியானது பெண்களுக்கு தன்னம்பிக்கையுடன் அதிகாரத்தையும் அளிக்கிறது என்று விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் ஆறுமுகம் பேசினார்.

### பட்டமளிப்பு விழா

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் 22-வது பட்டமளிப்பு விழா நேற்று காலை கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. விழாவிற்கு இ.எஸ். கல்விக்குழுமத்தின் நிர்வாக தலைவரும் செயலாளருமான எஸ்.செந்தில்குமார் தலைமை தாங்கி விழாவை தொடங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் அகிலா அனைவரையும் வரவேற்று 2021-2022-ம் கல்வியாண்டிற்கான கல்லூரியின் வளர்ச்சிநிலை குறித்த ஆண்டறிக்கை வாசித்தார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் டி.ஆறுமுகம் கலந்துகொண்டு இளங்கலை பட்டப்படிப்பை நிறைவு செய்த 723 மாணவிகளுக்கு பட்டங்களையும், துறை சார்ந்து மற்றும் பல்வேறு பாடங்களில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு கல்லூரியின் அறக்கட்டளை சார்பாக விருது, ஊக்கத்தொகை, சான்றிதழ்களை வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:-

### தன்னம்பிக்கை

ஒரு பெண் அதிகாரம், பொருளாதார மேம்பாடு, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு, பாலின சமத்துவம், பெண் குழந்தை கல்வி, சமூக மற்றும் கலாச்சார மேம்பாடு, உறவுகளில் அதிகாரம், ஆகியவற்றிற்கான புரிதலைப்பெறவும் உயர்வு நிலையை அடையவும் பெண் கல்வி மிகவும் முக்கியமானதாகும். கல்வியானது பெண்களுக்கு அறிவு, திறன், தன்னம்பிக்கையை அளிப்பதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. பெண் கல்விக்கான சவால்கள், பெண்கள் சமூகத்தில் வளர்ச்சி பெறுவதற்கான வழிமுறைகள், பெண்களின் எதிர்கால திட்டங்கள் ஆகியவை குறித்து திருவள்ளுவர், பாரதி ஆகியோரின் படைப்புகளை மேற்கோள்காட்டி விரிவாக விவரித்ததுடன், பட்டம் பெறவுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இவ்விழாவில் கல்லூரியின் துணை முதல்வர் செல்வி, தேர்வுக்கட்டுப்பாட்டாளர் ஸ்ரீதேவி, புல முதன்மையர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் கலந்துகொண்டனர். முடிவில் கல்லூரியின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு முதன்மையர் கலைமதி நன்றி கூறினார்.

தினகரன் - 11.09.2023

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# 23வது பட்டமளிப்பு விழா




▸ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர் ராஜேந்திரன் தண்டபாணி மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கினார். அருகில் கல்லூரி செயலர் செந்தில்குமார்.

விழுப்புரம், செப். 11: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் 23வது பட்டமளிப்பு விழா நடந்தது.

இ.எஸ். கல்விக்குழும நிர்வாக தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். முதல்வர் அகிலா வரவேற்றார். சென்னை, சோஹோ கற்றல் புலம் தலைவர் ராஜேந்திரன் தண்டபாணி, இளங்கலை பட்டப்படிப்பு நிறைவு செய்த 647 மாணவிகளுக்கு பட்டங்களும், துறை சார்ந்த மற்றும் பல பாடங்களில் முதன்மை பெற்ற மாணவிகளுக்கு கல்லூரி அறக்கட்டளை சார்பில் விருது, ஊக்கத் தொகை மற்றும் சான்றிதழ் வழங்கினார். முன்னதாக, சோஹோ கற்றல் புலம் தலைவர் ராஜேந்திரன் தண்டபாணி கூறியதாவது,

பெண்கள் தொழில்நுட்பம், பல்லூடகம், புத்தாக்கம் ஆகிய துறைகளில் ஏற்றம் பெறுதல் அவசியமாகும். வாழ்வில் இன்றியமையாத முடிவுகளை பெண்கள் எடுக்கும் தருணத்தில் மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். கல்லூரி வளாகத்தில் வைத்துள்ள தலைசிறந்த பெண் தலைமையாளர்களின் மேற்கோள்கள் மாணவிகளுக்கு உத்வேகத்தை ஏற்படுத்தும். பட்டம் பெறும் மாணவிகள் மனதில் உறுதி, அனைத்து தடைகளை சமாளிக்கும் திறன், தன்னம்பிக்கையோடு செயல்படுதல், வாழ்வு மனப்பான்மையை தவிர்த்தல், புத்தாக்க முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளுதல், உத்வேகத்தோடு செயல்படுதல், நீங்கள் சார்ந்த சூழலை மகிழ்வோடு கட்டமைக்கும் திறன் ஆகியவற்றை வளர்த்து கொள்ள வேண்டும். ஆசிரியரின் கற்றல், அனுபவ கற்றல், சமூக கற்றல் ஆகியவற்றோடு வாழ்வியல் கற்றல் என்பது தான் நம்மை நன்னிலைப்படுத்தும் என கூறினார். இதில், துணை முதல்வர், தேர்வு கட்டுப்பாட்டாளர், புல முதன்மையர்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள், பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர். ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு பேராசிரியை கலைமதி நன்றி கூறினார்.

## விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# தீத்தடுப்பு பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



விழுப்புரம், செப்.23-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நேற்று விழுப்புரம் தீயணைப்பு மீட்பு பணிகள் துறை சார்பில் பேரிடர் மேலாண்மை மற்றும் தீத்தடுப்பு பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் தீயணைப்பு துறையின் மாவட்ட அலுவலர் பாஸ்கரன், உதவி மாவட்ட அலுவலர் ஜெய்சங்கர் மற்றும் தீயணைப்பு துறையை சேர்ந்த பணியாளர்கள் கலந்துகொண்டு திட, திரவ எரிபொருள்களை கொண்டு தீயை அணைக்கும் முறைகளை விரிவாக விவரித்ததுடன், செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தனர். மேலும் மீட்பு உபகரணங்களுடன் பேரிடர் கால பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர். அப்போது புயல், மழை வெள்ள காலங்களில் ஆபத்தில் சிக்கி உள்ளவர்களை எவ்வாறு மீட்பது, அவர்களை மீட்டு முதலுதவி சிகிச்சை அளிக்கும் முறைகள், ஆபத்து காலத்தில் உயரமான கட்டிடங்களில் சிக்கியிருப்பவர்களை எவ்வாறு மீட்பது மற்றும் தீத்தடுப்பு செயல்முறை விளக்கம் குறித்து மாணவ- மாணவிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் தேசிய மாணவர் படை, கற்றல் அமைப்பு, சமூக சேவை அமைப்பு, அறிவியல் அமைப்புகளை சேர்ந்த மாணவிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

தினதந்தி - 23.09.2023



**விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்**

# ரோட்டரி பேரவை தொடக்க விழா

விழுப்புரம், ஆக.23-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ரோட்டரிபேரவை தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் அகிலா தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக உலக ரோட்டரி பேரவை தலைவர் தினேஷ் சுப்பிரமணியம் கலந்துகொண்டு ரோட்டரி பேரவையின் அம்சங்கள் மற்றும் சேவைகள் குறித்து சிறப்புரையாற்றினார். அதோடு, விழுப்புரம் ரோட்டரி சங்கத்தின் ஆதரவுடன் திறமை கொண்ட மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும் என்றும், ரோட்டரியில் பதிவு செய்பவர்களுக்கு உறுப்பினர் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார். இவ்விழாவின்போது தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி ரோட்ராக்ட் பேரவை, சர்வதேசரோட்டரி பேரவையில் இணைந்ததற்கான நியமன ஆணையை ரோட்ராக்ட் தலைவர் மோசிகா, செயலாளர் நிலோபர் அலாய், பொருளாளர் ரோஷினி ஆகியோரிடம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் ரோட்டரி தலைவர்கள் பாக்கியராஜ், ரமேஷ்குமார், செயலாளர் அன்பழகன், பொருளாளர் சுரேஷ்குமார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினதந்தி - 23.08.2023

# தமிழகத்தில் இருமொழிக் கொள்கையில் அரசு உறுதியாக இருக்கிறது



விழுப்புரத்தில் சமூக நீதி பாதுகாப்பு இயக்கம் சார்பில் நடந்த விழாவில் சமூக செம்மல் விருதுகளை அமைச்சர் பொன்முடி வழங்கினார். அருகில் லட்சுமணன் எம்எல்ஏ, இஎஸ் கல்வி குழும தலைவர் சாமிக்கண்ணு.

## அமைச்சர் பொன்முடி தகவல்

விழுப்புரம், அக். 2: விழுப்புரம் மாவட்ட சமூகநீதிப் பாதுகாப்பு இயக்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் சமூக சேவைச் செம்மல் விருது வழங்கும் விழா தெய்வானை அம்மாள் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று நடந்தது. விழாவுக்கு சமூகநீதி பாதுகாப்பு இயக்க தலைவர் குபேரன் தலைமை தாங்கினார். நிறுவனர் சாமிக்கண்ணு முன்னிலை வகித்தார். விழாவில் மூன்று விருதாளர்களுக்கு சமூக சேவை செம்மல் விருதுகளை வழங்கி உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி பேசியதாவது: சமூகநீதிக்காக குரல் கொடுத்தவர்களுக்கு விருது வழங்குவது பாராட்டுக்குரியது. மத வேறுபாடுகள் இல்லாமல், ஆணும், பெண்ணும் சமம் என்பதுதான் சமூக நீதி. அனைத்துத் தரப்பு மக்களும் படிக்க வேண்டும். எல்லோரும் ஒன்று என்பதுதான் சமூகநீதி. நீட் நுழைவுத்தேர்வு இல்லாத நிலையில்தான் பலரும் மருத்துவம் படித்து மருத்துவரானார்கள்.

ஒரு காலத்தில் பெண்கள் படிக்க முடியாத நிலை இருந்தது. ஆனால் இன்று பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சாதித்து வருகின்றனர். பெண் கல்விக்காக பல்வேறு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை படித்து உயர்கல்விப் படிக்கும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல அரசுப் பள்ளிகளில் படித்த மாணவ, மாணவிகளுக்கு பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட படிப்புகளில் 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதுடன் அவர்களின் கல்விக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக் கொள்கிறது.

தமிழகத்தில் இருமொழிக் கொள்கைதான் இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எந்தமொழியாக இருந்தாலும் படிக்கலாம். அதில் தவறில்லை. ஆனால் அதை கட்டாயம் படித்தாக வேண்டும் என்பதை திணிக்கக்கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் காஞ்சி மகா பெரியவர் சங்கராச்சாரியார் விருதை உளுந்தூர்பேட்டை சாரதா ஆசிரமத்தின் யத்தீஸ்வரி அமேய பிரியா அம்பா, முன்னாள் நகர்மன்றத் தலைவர் சண்முகனார் விருதை மருத்துவர் ஹரிக்குப் பதிலாக அவரது மகன் வாசுதேவன், திருக்குறள் முனுசாமியார் விருதை விழுப்புரம் ராமகிருஷ்ணா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி முன்னாள் முதல்வர் பாட்ஷா ஆகியோருக்கு வழங்கி, தலா ரூ.1 லட்சம் பணமுடிப்பையும் வழங்கினார்.

விழுப்புரம் எம்.பி. ரவிக்குமார், எம்எல்ஏ லட்சுமணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சமூகநீதிப் பாதுகாப்பு இயக்க செயலர் விக்கிரமன், பொருளாளர் சின்னையா, இணைச் செயலர் ஆறுமுகம், தெய்வானை அம்மாள் மகளிர் கலை அறிவியல் கல்லூரி செயலர் செந்தில்குமார், முன்னாள் நகரமன்ற தலைவர் ஜனகராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்று பேசினர். தொடர்ந்து விருது பெற்றவர்கள் ஏற்புரை வழங்கினர்.

முன்னதாக, சமூகநீதி பாதுகாப்பு இயக்கத்தின் துணை தலைவர் தியாகராஜன் வரவேற்றார்.

தினகரன் - 2.10.23

2-10-2023



விழாவில் அமைச்சர் பொன்முடி சமூக சேவை செம்மல் விருது வழங்கியபோது எடுத்த படம். அருகில் ரவிக்குமார் எம்.பி. டாக்டர் லட்சுமணன் எம்.எல்.ஏ. கல்வியாளர் சாமிக் கண்ணு மற்றும் பலர் உள்ளனர்.

### விழுப்புரத்தில்

# சமூக சேவை செம்மல் விருது வழங்கும் விழா

## அமைச்சர் பொன்முடி பங்கேற்பு

விழுப்புரம், அக்.2-விழுப்புரத்தில் சமூக சேவை செம்மல் விருது வழங்கும் விழா நடந்தது. இதில் அமைச்சர் பொன்முடி கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.

### சமூக சேவை செம்மல் விருது

விழுப்புரம் மாவட்ட சமூக நீதி பாதுகாப்பு இயக்கம் மற்றும் ரோட்டரி சங்கம், அரிமா சங்கம், வர்த்தகர் சங்கம், ஆகியவை இணைந்து சமூக சேவை செம்மல் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியை விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடத்தினர். இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட சமூகநீதி பாதுகாப்பு இயக்க தலைவர் ஆர். குபேரன் தலைமை தாங்கினார். இயக்க நிறுவனர் கல்வியாளர் சாமிக்கண்ணு முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி கலந்து கொண்டு காஞ்சி சங்கராச்சாரியார் விருதினை உளுந்தூர்பேட்டை ஸ்ரீ சாரதா ஆசிரம யதிஸ்வரி அமேய பிரியா அம்பாவுக்கும், முன்னாள் நகர் மன்ற தலைவர் சண்முக உடையார் விருதினை விழுப்புரம் டாக்டர் ஹரிக்கும், திருக்குறள் முனுசாமி விருதினை ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் பாட்ஷாவிற்கும் வழங்கி தலா ரூ.1 லட்சத்திற்கான காசோலைகளையும் வழங்கி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

### உயர்கல்வி பெற...

கடந்த 1989-ம் ஆண்டு கிராமப்புற ஏழை எளிய மாணவிகள் உயர்கல்வி பெற வேண்டும் என்பதற்காகவே மகளிர் கல்லூரியை உருவாக்கியவர் சாமிக்கண்ணு. அவரது ஏழுமலை பாலிடெக்னிக் கல்லூரியில் படித்து இன்றைக்கு இஸ்ரோவில் பெரிய விஞ்ஞானியாக பணியாற்றி வருபவர் வீரமுத்துவேல். அது மட்டும் அல்லாமல் சட்டமன்ற உறுப்பினராக உருவாகி இன்று அமைச்சராக நிற்கிறேன் என்றால் அதற்கு காரணமே சாமிக்கண்ணு தான். இவ்வாறு அமைச்சர் பொன்முடி பேசினார்.

இந்த விழாவில் விழுப்புரம் எம்.பி. ரவிக்குமார், டாக்டர் லட்சுமணன் எம்.எல்.ஏ., மாவட்ட தி.மு.க. பொருளாளர் ஜனகராஜ், விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி செயலாளர் எஸ். செந்தில்குமார், சுவாமி விவேகானந்தா கல்லூரி தலைவர் தியாகராஜன், நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர தி.மு.க. செயலாளர் சர்க்கரை, செஞ்சி தொழிலதிபர் கோபிநாத், இயக்க செயலாளர் விக்ரமன், பொருளாளர் சின்னையா செட்டியார், இணை செயலாளர் ஆறுமுகம், டாக்டர் சிவக்குமார், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் செல்வராஜ், செயற்குழு உறுப்பினர் பழனி, பருவத ராஜ மீனவர் பொது அறக்கட்டளை உயர் மட்ட குழு உறுப்பினர் பரமசிவம், கல்லூரி முதல்வர் அகிலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினதந்தி-
02/10/2023

# திணிக்கப்படும் புதிய கல்வி கொள்கை

## அமைச்சர் பொன்முடி பேச்சு

விழுப்புரம், அக். 2–

'மத்திய அரசால் திணிக்கப்படும் புதிய கல்விக் கொள்கை குறித்து கல்வியாளர்கள் சிந்திக்க வேண்டும்' என அமைச்சர் பொன்முடி பேசினார்.

விழுப்புரத்தில் சமூக நீதி பாதுகாப்பு இயக்கம் சார்பில் நேற்று நடந்த விருது வழங்கும் விழாவில், விருதுகளை வழங்கி, அமைச்சர் பொன்முடி பேசியதாவது:

விழுப்புரம் மாவட்ட சமூக நீதி பாதுகாப்பு இயக்கம், காஞ்சி பெரியவர் சங்கராச்சாரியார், திருக்குறள் முனுசாமி, மறைந்த நகர மன்ற தலைவர் சண்முகம் ஆகியோர் பெயரில் விருதுகளை, பொருத்தமானவர்களுக்கு வழங்கி சமூகநீதி காக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது.

இவர்கள், சமூக நீதிக்காக குரல் கொடுத்தவர்கள். அவர்கள் பெயரிலான விருதுகளை, மருத்துவர்கள், கல்வியாளர்கள் பெறுவது சிறப்பாகும்.

முந்தைய காலங்களில், நீட் போன்ற நுழைவுத் தேர்வு இல்லாததால், அடித்தட்டு மக்களும் படித்து, டாக்டர்களாக இன்ஜினியர்களாக வந்து



விழுப்புரத்தில், நடந்த சமூக சேவை செம்மல் விருது வழங்கும் விழாவில் அமைச்சர் பொன்முடி விருது வழங்கி கவுரவித்தார்.

சமூக நீதிக்கு சான்றாகும்.

ஜாதி, மத வேறுபாடு கூடாது, ஆண், பெண் சமம் ஆகியவற்றை சமூக நீதி வலியுறுத்துகிறது. முன்பு பெண்கள் படிக்காமல் இருந்தனர்.

ஆண்கள் மட்டுமே படித்தனர். அந்த தடையெல்லாம் நீங்கி, சமூக நீதி நிலைநாட்டப்பட்டு, தற்போது அனைத்து தரப்பு மக்களும் படிக்கின்றனர்.

இங்குள்ள ஏழுமலை பாலிடெக்னிக்கில் படித்த

திராயன்–2 விண்ணில் செலுத்தி பெருமை சேர்த்துள்ளார்.

இப்போது, நமக்குள் ஜாதி, மத வேற்றுமை இல்லாமல் உள்ளது. சிலர், அந்த வேற்றுமையை வளர்க்க முயற்சிக்கின்றனர். அதனை முறியடித்து, சமூக நீதியை கொண்டு வர வேண்டும்.

கல்லூரிகளில் தமிழ் வழி படிப்பை முதலில் அண்ணாதுரையும், கருணாநிதியும் தான் கொண்டு

முதல்வர் ஸ்டாலின் கொண்டு வந்தார்.

இப்போது, மத்திய அரசால் புகுத்தப்படும் புதிய கல்வி கொள்கை குறித்து, கல்வியாளர்கள் சிந்திக்க வேண்டும். அனைத்து மொழியும் நாம் படிக்கலாம்.

ஆனால், 3வதாக ஒரு மொழியை, கட்டாயமாக்குவதை ஏற்க முடியாது. இருமொழி கொள்கையை நாம் பின்பற்ற வேண்டும்.

தினமலர் - 02.10.2023

V15
Triple Camera

தினமலர் - 2.10.2023

# தெய்வானை மகளிர் கல்லூரியில் முன்னாள் மாணவிகள் கருத்தரங்கு



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகவியல் மேலாண்மைத் துறை சார்பில் முன்னாள் மாணவிகள் கருத்தரங்கு நிகழ்ச்சி நடந்தது.

**விழுப்புரம், அக். 2–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகவியல் மேலாண்மை துறை சார்பில் முன்னாள் மாணவிகள் கருத்தரங்கு நடந்தது.

வணிகவியல், மேலாண்மைத் துறை தலைவர் வாசுகி தலைமை தாங்கினார். டில்லி, பிரோஸ் மற்றும் பவுன்ஸ் மனித வள மேலாண்மை கன்சல்டன்ட்ஸ் மேலாளர் சுகன்யா கவுதம், 'நெட்வொர்க்கிங் மற்றும் டெவலப்பிங் ஒரு பெர்சனல் பிராண்ட்' தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

இதில், நெட்வொர்க்கிங் என்பது இருவழி தொடர்பு, உறவை வளர்த்தல் என்றும், தொழில் வளர்ச்சி சூழல் பற்றி கூறினார். பின், அவர் மாணவிகளுக்கு பல பயனுள்ள உதவி குறிப்புகளை வழங்கி அவர்களுடன் உரையாடி, அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். உதவி பேராசிரியர் ராஜா நன்றி கூறினார்.

Camera

தினதந்தி 03.09.2023



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# உயிர்வேதியியல் துறை கருத்தரங்கம்

விழுப்புரம், செப்.3-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர்வேதியியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சித்துறையின் சார்பில் ஷீல்ட் ஹெல்த்கேர் பி.சி.டி.யின் மூத்த மருந்து சந்தைப்படுத்தல் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக மேலாளர் ரமா [illegible]சன் கலந்துகொண்டு "பயோகெமிஸ்ட்ரி- மருந்துகளில் தொழில் பாதைகள்" என்ற தலைப்பில் பேசினார். கொரோனா ஊரடங்கு காலத்திற்குப்பிறகு இந்தியாவில் மருந்துத்துறையின் முக்கியத்துவம், மேம்பாடு குறித்தும்; மருந்துத்துறையில் உயிர்வேதியியலாளர்களின் பங்கைப்பற்றியும் அவர் எடுத்துரைத்தார். மேலும் மாணவர்களை சுய உந்துதலாகவும், அவர்களின் இலக்கைநோக்கி முன்னேறவும் ஊக்குவித்தார்.

தொடர்ந்து, மருந்துத்துறையில் உள்ள மருந்து வேதியியலாளர்கள், ஆய்வகமேலாளர்கள், மருத்துவ ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள், அறிவியல் ஆலோசகர்கள் மற்றும் மருந்தியல் கண்காணிப்பு போன்ற பல்வேறு வேலை வாய்ப்புகள் பற்றி விளக்கி கூறப்பட்டது. இக்கருத்தரங்கில் உயிர்வேதியியல்துறைத்தலைவர் ஸ்ரீதேவி மற்றும் உயிர்வேதியியல்துறை மாணவிகள் பலர் கலந்துகொண்டனர். முன்னதாக சிறப்பு விருந்தினர் ரமா ஸ்ரீவத்சனுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

Camera




■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ரத்ததான முகாம் நடந்தது.

# ரத்ததான முகாம்

**விழுப்புரம், அக். 16–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ரோட்டரேட் அமைப்பு, ரோட்டரி சங்கம் சார்பில் ரத்ததான முகாம் நடந்தது.

முகாமிற்கு, கல்லூரி முதல்வர் அகிலா தலைமை தாங்கினார். மாணவியர் புல முதன்மையர் ராஜேஸ்வரி, ரோட்டரேட் அமைப்பு மாணவியர் தலைவர் மோஷிகா, செயலாளர் நிலோபர் அலீயா, ரோட்டரேட் சங்கத் தலைவர், செயலாளர் உட்பட உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

முகாமில், பேராசிரியர்கள், மாணவிகள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் ரத்ததானம் செய்தனர்.

முகாமில், ரத்த தானம் எவ்வாறு உயிர்களைக் காப்பாற்றும் என்பது குறித்தும், ரத்த தானத்தின் அவசியம் குறித்தும் விளக்கப்பட்டது.

தினமலர் - 16.10.23

# மகளிர் கல்லூரியில் சக்ஷம் அமைப்பு பயிற்சி




■ விழுப்புரம் மாவட்ட சக்ஷம் அமைப்பு சார்பில் பார்வை திறனற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான 2 நாள் கணினி மற்றும் ஆன்ட்ராய்டு மொபைல் பயன்பாட்டு பயிற்சி நடந்தது.

**விழுப்புரம், நவ. 5–**

விழுப்புரத்தில், மாவட்ட சக்ஷம் அமைப்பு சார்பில் பார்வை திறனற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான 2 நாள் கணினி மற்றும் ஆன்ட்ராய்டு மொபைல் பயன்பாட்டு பயிற்சி நடந்தது.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லுாரியில் நடந்த பயிற்சி துவக்க விழாவிற்கு, மாவட்ட தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கி, சக்ஷம் அமைப்பு பற்றியும், அரசு சார் திட்டங்களை மாற்றுத் திறனாளிகள் பெறும் திறம் பற்றியும் கூறினார்.

இணைச் செயலாளர் பொற்செல்வி வரவேற்றார். மாவட்ட ரோட்டரி சங்கத் தலைவர் கன்யா ரமேஷ் சிறப்புரையாற்றினார். கல்விக்குழுமம் தலைவர் சாமிக்கண்ணு, மாவட்ட புரவலர் சந்திரசேகர் வாழ்த்திப் பேசினர். பயிற்சியில் 50 பேர் பங்கேற்றனர்.

இவர், மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சி திட்டம் குறித்தும், தனித் திறன்கள், நினைவாற்றல், தன்னம்பிக்கை திறன் பற்றி கூறினார். தொடர்ந்து, சக்ஷம் மாநில தலைவர் சபாஷ் ராஜ், சக்ஷம் அமைப்பு, அதன் சேவைகள், பார்வை திறனற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில்நுட்ப தேவை, இணைய தளம் செயல்படுத்தும் திறம் பற்றி கூறினார்.

பேராசிரியர்கள், ரோட்டரி, அரிமா சங்க பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், கல்லுாரி மாணவர்கள் பங்கேற்றனர்.

தினமலர் -05.11.2023



## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# தீபாவளி கொண்டாட்டம்

விழுப்புரம், நவ.11-
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தீபாவளி கொண்டாட்ட விழா நடைபெற்றது. விழாவில் கல்லூரி முதல்வர் அகிலா கல்லூரி செயல்பாடுகள் குறித்து பேசினார். தமிழாய்வுத்துறையின் தலைவர் மணிகண்டன் சிறப்புரையாற்றினார். இதனை தொடர்ந்து அலுவல் சார்ந்த மற்றும் அலுவல்சாரா பணியாளர்களுக்கு தீபாவளி புத்தாடை வழங்கப்பட்டது. தொடர்ந்து, கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் அனைத்து பேரசிரியர்கள், ஊழியர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

விழாவின்போது பட்டாசுகள் வெடித்து கல்லூரி ஊழியர்கள், பேராசிரியர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அனைவருக்கும் இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் நிர்வாகத்தலைவர் செந்தில்குமார், தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். முன்னதாக கல்லூரியின் கணினி அறிவியல் துறைத்தலைவர் மனோகரி வரவேற்றார். முடிவில் தமிழாய்வுத்துறையின் உதவிப் பேராசிரியர் ஹேமலதா நன்றி கூறினார்.

தினத்தந்தி -11.11.2023

விழுப்புரம்

# இ.எஸ். கலைக்கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்




விழுப்புரம், டிச.12-

விழுப்புரம் இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் சார்பில் இ.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. முகாமிற்கு இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் தலைவர் செந்தில்குமார் தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்தார். கல்லூரியின் முதல்வர் முரளிதரன் வாழ்த்துரை வழங்கினார். இதில் சென்னையை சேர்ந்த 6 பிரபல தனியார் நிறுவனங்களின் அதிகாரிகள், மாணவர்களிடம் நேர்காணலை நடத்தினர்.

இம்முகாமில் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு கல்லூரிகளில் இருந்து 500- க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

தினதந்தி -12.12.23

# அனைவருக்குமான திட்டங்களை செயல்படுத்தியவர் கருணாநிதி

## பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் புதன்கிழமை 'சட்டமன்ற நாயகர் கலைஞர்' என்ற தலைப்பில் கருத்தரங்கில் உரையாற்றி சான்றிதழ் பெற்ற மாணவ, மாணவிகளுடன் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, இரா.லட்சுமணன் எம்எல்ஏ, முன்னாள் எம்எல்ஏ சி.ஞானசேகரன் உள்ளிட்டோர்.

விழுப்புரம், டிச.13: அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்களை அறிவித்து, அவற்றை செயல்படுத்தியவர் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி என்று தமிழக சட்டப் பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் நூற்றாண்டை கொண்டாடும் வகையில், விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியிலும், தனியார் மேல்நிலைப் பள்ளியிலும் 'சட்டமன்ற நாயகர் கலைஞர்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் பங்கேற்ற கல்லூரி, பள்ளி மாணவ,மாணவிகள் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் சட்டப்பேரவை செயல்பாடுகள், அவர் நிறைவேற்றிய திட்டங்கள் குறித்து பேசினர்.

இதையடுத்து, கருத்தரங்கில் பங்கேற்று பேசிய மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களையும், சிறப்பாக பேசியவர்களுக்கு பரிசுத் தொகையையும் வழங்கி சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேசியதாவது:

முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சிபுரிந்த காலத்தில் ஏழை, எளிய மக்கள், விவசாயிகள்,மாணவ,மாணவிகள்,பெண்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சிறப்புத் திட்டங்களை சட்டப் பேரவையில் அறிவித்து, செயல்படுத்தினார்.

அத்தகைய திட்டங்களால் தமிழகம் எவ்வாறு பொருளாதார முன்னேற்றம் கண்டது என்பதை இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து பயன்பெற வேண்டும்என்பதற்காகவும்,கருணாநிதியின் பேச்சாற்றல், எழுத்தாற்றல், செயலாற்றல் திறன் ஆகியவற்றை அறிந்து, அதை மாணவ, மாணவிகள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கிலும் சட்டமன்ற நாயகர் கலைஞர் குழு மூலமாக இந்த கருத்தரங்கம் நடத்தப்பட்டு வருகிறது.

கருணாநிதியின் வழியில் பெண்கள் முன்னேற்றத்துக்காக பல்வேறு திட்டங்களை தற்போதைய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார் என்றார்.

கருத்தரங்கில் விழுப்புரம் எம்எல்ஏ இரா.லட்சுமணன், முன்னாள் எம்எல்ஏ சி.ஞானசேகரன் ஆகியோர் கருத்துரையாற்றினர். சட்டப் பேரவைச் செயலக கூடுதல் செயலர் பா.சுப்பிரமணியம், இணைச் செயலர் மு.கருணாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர் மு.பரமேசுவரி, வேலூர் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் ஜி.எழிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரெ.அறிவழகன், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் ஷீலாதேவி சேரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கி.ஹரிதாஸ், அறிஞர் அண்ணா அரசுக் கல்லூரி முதல்வர் இரா. சிவக்குமார், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பெருமாள் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

தினமணி - 14.12.2023




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கலை கல்லூரியில் நடந்த கருணாநிதி நூற்றாண்டு விழா கருத்தரங்கில் சட்டசபை துணை சபாநாயகர் பிச்சாண்டி பேசினார். அருகில் லட்சுமணன் எம்.எல்.ஏ., டி.ஆர். ஓ., பரமேஸ்வரி.

# தெய்வானை மகளிர் கல்லூரியில் மாணவர்களுக்கான கருத்தரங்கம்

**விழுப்புரம், டிச. 14–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவர்களுக்கான கருத்தரங்கம் நடந்தது.

தமிழக சட்டசபை துணை சபாநாயகர் பிச்சாண்டி தலைமை தாங்கினார். லட்சுமணன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., ஞானசேகரன், முன்னிலை வகித்தனர். கருணாநிதி நூற்றாண்டு விழாவை யொட்டி, 'சட்டசபை நாயகர் கருணாநிதி' தலைப்பில் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சு கருத்தரங்கம் நடந்தது. அதே போல், துாய இருதய கான்வென்ட் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலை பள்ளியில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பேச்சு கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் கருணாநிதியின் சட்டசபை செயல்பாடுகள், அவர் நிறைவேற்றிய பல திட்டங்கள் பற்றி பேச்சாற்றல் மூலம் கூறினர்.

இதில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ், கல்லுாரி அளவிலும், பள்ளி அளவிலும் முதல் மூன்றிடம் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு பரிசு தொகையோடு, சான்றிதழை சட்டசபை துணை சபாநாயகர் பிச்சாண்டி வழங்கினார்.

இதில், சட்டசபை செயலக கூடுதல் செயலாளர் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், மாவட்ட ஊராட்சிக்குழு துணை தலைவர் ஷீலாதேவி, கல்லுாரி கல்வி இணை இயக்குநர் எழிலன், கலெக்டர் நேர்முக உதவியாளர் (பொது) அரிதாஸ், அரசு கலை கல்லுாரி முதல்வர் சிவக்குமார், பேரவை செயலகம் இணை செயலாளர் கருணாநிதி உட்பட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கண்டன ஆர்ப்பாட்டம்

**மரக்காணம், டிச. 14–**

மரக்காணம் துணை மின்நிலையம் எதிரில் கம்யூ., சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் மனோகர் தலைமை தாங்கினார். செயலாளர் உலகநாதன், பொருளாளர் செல்வி முன்னிலை வகித்தனர். துணைத் தலைவர் ஜானகிராமன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஸ்மார்ட் மீட்டர் பொறுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கட்சி நிர்வாகிகள் கண்டன கோஷங்கள் எழுப்பினர். தொடர்ந்து நிர்வாகிகள் மின்துறை அதிகாரியிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

தினமலர் - 14.12.2023



கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடந்த பேச்சு கருத்தரங்கில் முதல் 3 இடங்களை பிடித்த கல்லூரி மாணவ- மாணவிகளுக்கு சட்டமன்ற பேரவை துணைத்தலைவர் பிச்சாண்டி பரிசு, பாராட்டு சான்றிதழ்கள் வழங்கியபோது எடுத்த படம். அருகில் முன்னாள் எம்.எல்.ஏ. சி.ஞானசேகரன், டாக்டர் லட்சுமணன் எம்.எல்.ஏ. உள்ளனர்.

கலைஞர் கருணாநிதியைப்போல்

# சிறந்த தலைவராகவும், எழுத்தாளராகவும் வர வேண்டும்

## மாணவர்களுக்கு சட்டமன்ற பேரவை துணைத்தலைவர் பிச்சாண்டி அறிவுரை

விழுப்புரம், டிச.14-

கலைஞர் கருணாநிதியைப்போல் சிறந்த தலைவராகவும், எழுத்தாளராகவும் வர வேண்டும் என்று மாணவர்களுக்கு சட்டமன்ற பேரவை துணைத்தலைவர் பிச்சாண்டி அறிவுரை கூறினார்.

### கருத்தரங்கம்

விழுப்புரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சட்டமன்ற நாயகர் கலைஞர் என்ற தலைப்பில் பள்ளி- கல்லூரி மாணவ- மாணவிகளுக்கான பேச்சு கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்கு விழாக்குழு இணைத்தலைவரும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை துணைத்தலைவருமான கு.பிச்சாண்டி தலைமை தாங்கினார். விழாக்குழு உறுப்பினரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான ஞானசேகரன், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கருத்தரங்கில் கு.பிச்சாண்டி பேசியதாவது:-

### தமிழ்மொழி மீதான பற்று

கலைஞர் கருணாநிதி, தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்குமான பல்வேறு சிறப்புத்திட்டங்களை செயல்படுத்தினார். அத்தகைய திட்டங்களால் தமிழ்நாடு எவ்வாறு பொருளாதார முன்னேற்றம் காணப்பெற்றது என்பதை இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து பயன்பெற வேண்டும். கலைஞரின் சிறப்புமிக்க பேச்சாற்றல், எழுத்தாற்றல், செயலாற்றல் திறனை மாணவர்கள் அறிந்து தாங்களும் தங்களுடைய திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். கலைஞர் கருணாநிதி, தாய்மொழியான தமிழ் மீது மிகுந்த பற்று கொண்டு தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பல்வேறு சிறப்புகளை செய்துள்ளார். அதன் காரணமாகவே தமிழ்மொழி செம்மொழி என்ற அந்தஸ்தினை பெற்று உலகம் முழுவதும் தமிழ்மொழி சிறந்தமொழியாக விளங்கி வருகிறது.

கலைஞர் நிறைவேற்றிய சட்டங்களும், திட்டங்களும் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை அடிப்படையாக கொண்டிருந்தது. இந்தியாவில் எந்தவொரு முதல்-அமைச்சரும் இதுபோன்ற சிறப்பான திட்டங்களை நிறைவேற்றினார்களா என்றால் அது கேள்விக்குறிதான். இந்தியாவில் உள்ள பல மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இதற்கு முக்கிய காரணம் கலைஞர் நிறைவேற்றிய கல்வி சார்ந்த திட்டங்களே ஆகும். பள்ளிக் கல்வி மட்டுமல்லாமல் உயர் கல்வி வரை இலவச கல்வியை வழங்கினார். பெண்களுக்கு கல்வியில் பல்வேறு முன்னுரிமைகளை வழங்கியுள்ளதன் மூலம் பெண் கல்வியிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. அதுமட்டுமின்றி பெண்களுக்கு சொத்துரிமையில் சமபங்கு வழங்கும் சட்டத்தையும் நிறைவேற்றினார்.

### மாணவர்களுக்கு அறிவுரை

எனவே மாணவ- மாணவிகள் எதிர்காலத்தில் கலைஞர் கருணாநிதியை போல சிறந்த தலைவராகவும், எழுத்தாளராகவும், பேச்சாற்றல் மிக்கவராகவும் வரவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். அதனை தொடர்ந்து பேச்சு கருத்தரங்கில் பள்ளி அளவிலும் மற்றும் கல்லூரி அளவிலும் முதல் 3 இடங்களை பிடித்த மாணவ- மாணவிகளுக்கு அவர் பரிசுத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

இக்கருத்தரங்கில் சட்டமன்ற பேரவை செயலக கூடுதல் செயலாளர் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் ஷீலாதேவி சேரன், கல்லூரி கல்வி இணை இயக்குனர் எழிலன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) அரிதாஸ், விழுப்புரம் அரசு கலைக்கல்லூரி முதல்வர் சிவக்குமார், சட்டமன்ற பேரவை செயலக இணைச்செயலாளர் கருணாநிதி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பெருமாள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினத்தந்தி - 14.12.2023

தினமலர் 07.01.24

# மாணவ விஞ்ஞானிகள் கருத்தரங்கு

விழுப்புரம், ஜன. 7–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், இளம் மாணவ விஞ்ஞானிகளுக்கான கருத்தரங்கு துவங்கியது.

கல்லூரி துணை முதல்வர் செல்வி வரவேற்றார். விழுப்புரம் மாவட்ட கல்வி அலுவலர் மகாலட்சுமி சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் அகிலா விளக்கவுரையாற்றினார். ஆராய்ச்சிப்புல முதன்மையர் கலைமதி சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கில் அறிவியலில் ஆர்வமுள்ள 9ம் வகுப்பு பயிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் குடியிருப்பு பயிற்சித் திட்டத்தின் மூலம், அறிவியல் மற்றும் ஆராய்ச்சியை வெளிப்படுத்தினர்.

மேலும், விழுப்புரம், கடலூர் மாவட்ட கிராமப்புற பள்ளிகளில் பயிலும், அறிவியல் பாடத்தில் ஆர்வத்துடன், அதிக மதிப்பெண் பெற்ற 80 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

கல்லூரி உதவி பேராசிரியர் கலைவாணி நன்றி கூறினார். கருத்தரங்கு வரும் 10ம் தேதி வரை நடக்கிறது.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், இளம் மாணவ விஞ்ஞானிகளுக்கான கருத்தரங்கு நடந்தது.

# மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு

**விழுப்புரம், ஜன. 6:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் இணைந்து நடத்திய இளம் மாணவ விஞ்ஞானிகளுக்கான கருத்தரங்கு கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட கல்வி அலுவலர் டி.எஸ்.மகாலட்சுமி பங்கேற்றுப் பேசினார். கல்லூரி முதல்வர் எஸ்.அகிலா நோக்கவுரையாற்றினார். ஆராய்ச்சிப் புல முதன்மையர் கலைமதி வாழ்த்துரை வழங்கினார். பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

முன்னதாக, கல்லூரி துணை முதல்வர் வி.எஸ்.செல்வி வரவேற்றார். நிறைவில் எம். கலைவாணி நன்றி கூறினார்.

தினமணி - 07.01.2024

## விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்




விழுப்புரம், ஜன.9-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியும், தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகமும் இணைந்து இளம் மாணவ விஞ்ஞானிகளுக்கான கருத்தரங்கினை நடத்தியது. இதற்கு கல்லூரி முதல்வர் அகிலா தலைமை தாங்கினார். கல்லூரி துணை முதல்வர் செல்வி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக விழுப்புரம் மாவட்ட கல்வி அலுவலர் மகாலட்சுமி கலந்துகொண்டு பேசினார். அப்போது, இது கல்வி சாதனைக்கான நிகழ்வு மட்டும் அல்ல. மாணவர்கள் இடையே ஆர்வத்தை தூண்டுவதற்கும் உலகைச் சுற்றியுள்ள அனைத்தையும் தைரியத்துடன் கேள்வி கேட்பதற்கும் நடக்கும் நிகழ்ச்சி. அறிவியல் துறையானது எப்போதும் விரிவடைந்து வருகிறது. இதில் மாணவர்கள் அதன் வளர்ச்சிக்கு தனித்துவமான மற்றும் அர்த்தமுள்ள வழிகளில் பங்களிக்கும் திறனை கொண்டுள்ளனர் என்றார். இதில் கல்லூரி ஆராய்ச்சி போல முதன்மையர் கலைமதி உள்பட விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் கல்லூரி உதவி பேராசிரியர் கலைவாணி நன்றி கூறினார். இந்த கருத்தரங்கு வருகிற 10-ந்தேதி வரை நடக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### விழுப்புரம் இ.எஸ். செவிலியர் கல்லூரியில்

# 16-வது விளக்கு ஏற்றுதல் நிகழ்ச்சி



விழுப்புரம், ஜன.14-

விழுப்புரம் இ.எஸ். செவிலியர் கல்லூரியில் 16-வது ஆண்டு விளக்கு ஏற்றுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இ.எஸ். எஸ்.கே. கல்வி நிறுவனங்களின் நிர்வாகி செந்தில்குமார் தலைமை தாங்கினார். கல்லூரி துணை முதல்வர் கார்த்தி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை துணை செவிலிய கண்காணிப்பாளர் செல்மாதாமஸ் கலந்துகொண்டு பிளாரன்ஸ் நைட்டிங்கேல் தீபத்தை ஏற்றி வைத்தார். அதனை தொடர்ந்து செவிலிய மாணவ- மாணவிகள், தீப ஒளியை ஏற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் கலந்துகொண்டனர். முடிவில் பேராசிரியர் ஜெபசீலி கிளாடிஸ்மேரி நன்றி கூறினார்.

தினத்தந்தி 14-1-2024

## கல்லூரியில் பொங்கல் விழா

விழுப்புரம், ஜன. 17–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மற்றும் கல்வியியல் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவிகள் சார்பில், சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

இ.எஸ்., கல்வி குழும செயலர் செந்தில்குமார், இணை செயலர் நிஷா ஆகியோர் பொங்கல் விழாவை துவக்கி வைத்தனர். கல்லூரி முதல்வர் அகிலா வரவேற்றார். மாணவியர் பொங்கல் வைத்தனர்.

தொடர்ந்து, ஆசிரியர் மற்றும் ஊழியர்களுக்கும் பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவியர் புல முதன்மையர் பேராசிரி ராஜேஸ்வரி நன்றி கூறி




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

தினமலர் 17-1-2024

### விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில்

## சமத்துவ பொங்கல் விழா



விழுப்புரம், ஜன.17–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு இ.எஸ். எஸ்.கே. கல்விக்குழுமத்தின் நிர்வாக தாளாளரும் செயலாளருமான செந்தில்குமார் தலைமை தாங்கினார். இணைச்செயலாளர் நிஷா செந்தில்குமார் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் அகிலா அனைவரையும் வரவேற்றார். விழாவில் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மற்றும் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரியின் மாணவிகள் கலந்துகொண்டு புதுப்பானையில் பொங்கல் வைத்து வழிபட்டனர். இவ்விழாவையொட்டி மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முடிவில் மாணவியர் புல முதன்மையர் பேராசிரியை ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

தினதந்தி 17-1-2024